# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
## C.C. No.466/2022 P.W.7

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | ராஜேஷ் | த-பெ | ஜெயசுப்ரமணியன் |
| ஊர்: | : | காரைக்குடி | | |
| வயது: | : | 46/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | தலைமை காவலர் | மாவட்டம் | சிவகங்கை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **02.04.2026**

**1ம் எதிரி ஆஜர் இல்லை. மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது. பிற எதிரிகள் ஆஜர்.**

-----------------------------------------------------------------------------------------------

முதல் விசாரணை.

1. நான் தற்சமயம் காரைக்குடியில் வசித்து செட்டிநாடு காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணி செய்து வருகிறேன். அசா1 ஐ தெரியும். ஆஜர் எதிரிகளை தெரியும். கடந்த 2016 ம் ஆண்டு காரைக்குடி வடக்கு காவல் நிலையத்தில் முதல் நிலை காவலராக பணி செய்து வந்தேன். கடந்த 14.11.2016 அன்று மதியம் 2.00 மணியளவில் ஓட்டுநர் லூயிராஜா, சார்பு ஆய்வாளர் ராஜா மற்றும் நான் உட்பட மூன்று நபர்களும் செக்காலை ரோடு பாண்டியன் தியேட்டர் அருகில் கட்டுப்பாட்டு வாகன பொறுப்பு அலுவலராக போக்குவரத்து சரி செய்யும் பணியில் ஈடுபட்டு கொண்டிருந்தோம். அப்போது அசா1 அங்கிருந்த தியேட்டரில் இருந்து வெளியே வந்த நபர்களை பார்த்து சாலையில் ஓரமாக செல்லுமாறு சொன்னார். அதற்கு ஆஜர் எதிரிகள் நீ என்ன பெரிய ஆளா என்றும் சுன்னி மகனே என்று கீழ்நோக்கிய வார்த்தைகளால் திட்டினார். அப்போது அசா1 ஓரமாக தான் செல்ல சொல்கிறேன் அதற்கு ஏன் திட்டுகிறீர்கள் என்ற சொன்னதற்கு அருகில் இருந்த கட்டை கம்பை கொண்டு அங்கிருந்த ஆஜர் எதிரிகள் அசா1 ஐ கொல்லாமல் விட மாட்டேன் என்று மிரட்டினார்கள்.

2) அசா1 ஐ பார்த்து நான் மற்றும் சார்பு ஆய்வாளர் உள்ளிட்ட காவலர்களும் உடனடியாக அங்கு சென்று அவர்களை ஏன் இவ்வாறு பிரச்சனை செய்கிறீர்கள் என்று சொல்லி அங்கிருந்து கலைந்து செல்லும் படி சொன்னோம். அசா1 மேற்படி காரைக்குடி வடக்கு காவல் நிலையம் சென்று நடந்த விபரங்களை சொல்லி புகார் அளித்தார். நான் உடன் இருந்தேன். வழக்கு சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

குறுக்கு விசாரணை

1) எதிரிகள் அனைவரும் மனநிலை சரியான நபர்கள் என்றால் சரிதான். சம்பவம் நடந்த போது எதிரிகள் குடிபோதையில் இருந்ததாக புகாரில் சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரிகளை கைது செய்வதற்கு முன்னால் குடிபோதையில் எதிரிகள் இருந்தார்களா என்று ஆய்வு செய்தது சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. 14.11.2016 அன்று தெறி என்ற படம் தியேட்டரில் ரிலீஸ் ஆகி இருந்தது என்றால் சரிதான். மேற்படி தெறி படத்திற்கு எதிரிகள் அனுமதி வாங்கி பாண்டியன் தியேட்டர் அருகில் ப்ளேக்ஸ் போர்டு வைத்திருந்தார்கள் என்றால் வைத்திருந்தார்கள் ஆனால் அனுமதி வாங்கவில்லை. மேற்படி அனுமதி வாங்கினார்களா அல்லது வாங்கவில்லையா என்று எந்த ஆவணத்தையும் நான் பார்க்கவில்லை. எதிரிகள் வைத்த ப்ளேக்ஸ் போர்டை காவல் துறையினர் உதவியுடன் கிழித்து அப்புறப்படுத்தப்பட்டது என்றால் சரிதான்.

2) எதிரிகள் ப்ளேக்ஸ் போர்டு வைப்பதற்கு அனுமதி பெற்று தான் பாண்டியன் தியேட்டர் உள்ளே வைத்திருந்தார்கள் என்றால் சரியல்ல. எதிரிகள் அனுமதி பெற்றுதான் தியேட்டர் வாளகத்தில் ப்ளேக்ஸ் போர்டு வைத்திருந்தார்கள் மற்ற நபர்கள் அனுமதி பெறாமல் வைத்திருந்த ப்ளேக்ஸ் போர்டை அகற்றும்போது எதிரிகள் வைத்திருந்த ப்ளேக்ஸ் போர்டை அகற்றினோம் அப்போது எதிரிகள் அதுகுறித்து பேசிய போது சார்பு ஆய்வாளர் என்னடா போலீசை எதிர்த்து பேசுகிறாயா என்று கேட்டதற்கு எதிரிகளை அடித்தார் அதற்கு எதிரிகள் சட்ட ரீதியாக உங்களை எதிர்கொள்வோம் என்று சொன்னதற்கு என்னை வைத்து பொய்யாக வழக்கு போட்டு எதிரிகள் மீது பொய்யாக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

3) மேற்படி எதிரிகள் ப்ளேக்ஸ் போர்டு சம்பந்தமாக பிரச்சனை முடிந்தபின்பு கேல்மெல் அணியாமல் வாகனம் ஓட்டி வந்த போது அவர்களை பிடித்து சார்பு ஆய்வாளரும் அசா1ம் வழக்கு போடுவோம் என்று சொன்னதற்கு வழக்கு போடாமல் இருக்க வேண்டும் என்றால் கையூட்டு தரவேண்டும் என்று சொன்னதற்கு அவர்கள் கொடுக்க மறுத்துவிட்ட காரணத்தால் இந்த பொய்யான வழக்கை எதிரிகள் மீது போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. நான் சொன்னது போல் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. எதிரிகள் அனைவரும் படித்த நபர்கள் காவல்துறையினர் போக்குவரத்து சோதனையில் ஈடுபட்டிருந்தபோது எந்த வித முன் விரோதமும் இல்லாமல் காவல்துறையினரை திட்ட வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.04.06 14:15:18 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காரைக்குடி.